Australian Government
Department of Home Affairs

# ஆஸ்திரேலியாவில் உள்ள வேலைத்-தல உரிமைகள்

## ஆஸ்திரேலியாவில் வேலைத்-தல உரிமைகள் யாருக்கெல்லாம் உள்ளன?

தாம் பணியாற்றும் பிரதானமான இடங்களை ஆஸ்திரேலியாவில் கொண்டவர்களை, அல்லது ஆஸ்திரேலிய முதலாளி ஒருவரால் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளவர்களை ஆஸ்திரேலிய வேலைத்-தல சட்டங்கள் பாதுகாக்கின்றன. ஆஸ்திரேலியாவின் வேலைத்-தல சட்டங்களால் பாதுகாக்கப்படுவதற்கு ஆஸ்திரேலியப் பிரசையாகவோ, ஆஸிதிரேலியாவில் நிரந்தர வசிப்பிட உரிமை உள்ளவராகவோ இருக்கவேண்டிய தேவை தொழிலாளர்களுக்குக் கிடையாது.

ஆஸ்திரேலியாவில் வேலை செய்யும் அனைவருக்கும் உள்ள அதே அடிப்படை வேலைத்-தல உரிமங்களும், பாதுகாப்புகளும் விசா வைத்திருப்பவர்களுக்கு உள்ளன. ஒப்பந்தங்கள் அல்லது உடன்படிக்கைகளால் இந்த உரிமங்களை நீக்கிவிட இயலாது.

## உதவிக்காக நான் எங்கு செல்லலாம்?

ஆஸ்திரேலிய வேலைத்-தல சட்டங்களை ‘வேலை நியாய அரச-குறைகேட்பாளர்’(Fair Work Ombudsman (FWO))[1] எனும் அதிகாரி அமல்படுத்துவார்.

உங்களுடைய ஊதியம் மற்றும் கூலித்தொகைகள் எவ்வளவு என்பதைச் சோதித்துத் தெரிந்துகொள்வதற்கும், ‘ஊதியக்-கணினி’(pay calculator)[2] -யைப் பயன்படுத்துவதற்கும் உதவுவதற்கான இணைய-வழி சாதனங்களை FWO கொண்டுள்ளது. Record My Hours app - Fair Work Ombudsman[3] எனும் செயலியைப் பயன்படுத்தி விரைவாகவும், எளிதாகவும் நீங்கள் எத்தனை மணி நேரம் வேலை செய்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் பதிவுசெய்து வைத்துக்கொள்ளலாம். உங்களுடைய முதலாளி உங்களை நியாயமான முறையில் நடத்தவில்லை என்றோ, ஆஸ்திரேலியப் வேலைத்-தல சட்டங்களை அவர் பின்பற்றவில்லை என்றோ நீங்கள் நினைப்பீர்களேயானால், தகவல்கள், அறிவுரை அல்லது உதவி வேண்டி FWO -யுடன் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.
இந்த அலுவலகத்தினை 13 13 94 எனும் இலக்கம் மூலமாக நீங்கள் அழைக்கலாம்.

‘சட்ட உதவி’ (legal aid), சமூக சட்ட உதவி மையம் அல்லது அமைப்பு[4] ஒன்று ஆகியவற்றிடம் இருந்தும் உங்களால் உதவி பெற இயலுமாகலாம்.

## என்னுடைய விசாவைப் பொறுத்து என்ன?

உங்களுடைய விசாவிற்கான நிபந்தனைகளை நீங்கள் மீறியிருந்தால் கூட உங்களுடைய முதலாளியால் ‘உங்களுடைய விசா-வை ரத்து செய்ய இயலாது. ‘எல்லைப் பாதுகாப்புப் படை’ (Australian Border Force (ABF)) உள்ளடங்க, உள்நாட்டு விவகாரத் திணைக்கள (Department of Home Affairs (Home Affairs))த்தினால் மட்டுமே விசாக்களை வழங்க, விசாக்களை வழங்க மறுக்க அல்லது விசாக்களை இரத்து செய்ய இயலும்.

வேலை செய்யும் இடங்களில் விசாவில் இருப்பவர்கள் சுரண்டலுக்கு ஆளானால் அவர்களைப் பாதுகாக்க உதவும் சட்டங்களை ஆஸ்திரேலிய அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் புதிய பாதுகாப்புகள் ‘வேலைத்-தலப் பாதுகாப்புப் புகார் வலுவூட்டு வழிகாட்டுத் திட்டம்’ (Strengthening Reporting Protections Pilot)[5] எனும் திட்டத்தின் அங்கங்களாகும்.

[1] https://www.fairwork.gov.au/
[2] https://calculate.fairwork.gov.au/findyouraward
[3] https://www.fairwork.gov.au/tools-and-resources/record-my-hours-app
[4] https://www.fairwork.gov.au/tools-and-resources/other-workplace-relations-help/legal-help
[5] https://immi.homeaffairs.gov.au/visas/working-in-australia/work-rights-and-exploitation/strengthening-reporting-protections-pilot

**வேலை செய்வதற்கான அனுமதியுடன் கூடிய** விசா ஒன்று உங்களிடம் இருந்தால் இந்தத் திட்டத்திற்கு நீங்கள் தகுதி பெறக்கூடும்.

**வேலை செய்வதற்கு அனுமதிக்கப்படாத** தற்காலிக விசா ஒன்றை வைத்திருக்கும் ஒருவராக நீங்கள் இருந்தால், 'உள்நாட்டு விவகாரத் திணைக்களம்' (Home Affairs) உங்களுடைய விசாவின் நற்கூறுகளைப் பொறுத்து உங்களுடைய விடயத்தைக் கருத்தில் கொள்ளும்.

இந்த வழிகாட்டுத் திட்டத்திற்கு நீங்கள் தகுதி பெற்றிருந்தால், பின் வரும் தருணங்களில் 'உள்நாட்டு விவகாரத் திணைக்களம்' (Home Affairs) உங்களுடைய விசா-வை **இரத்து செய்யாது**:

- வேலை சம்பந்தப்பட்ட விசா நிபந்தனை ஒன்றை நீங்கள் மீறியிருந்தால், மற்றும்
- அந்த விசா மீறலுக்கும், வேலைத்-தல சுரண்டல் குறித்த விடயத்திற்கும் இடையே தொடர்பு ஒன்று இருந்தால், மற்றும்
- அநேக இதர நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருந்தால்.

பாதுகாப்புகள் குறித்து புகார் செய்வதற்கான இந்த புதிய வசதிகளை அணுக, நீங்கள் கட்டாயமாக:

- 'உள்நாட்டுத் திணைக்கள'த்திற்குத் தெரிவிப்பதற்கு முன்பாக, இந்தத் திட்டத்தில் பங்குபற்றும் அரச முகமை, அல்லது அங்கீகாரம் பெற்ற மூன்றாம் தரப்பினர் (accredited third party) ஒருவரைக் கொண்டு உங்களுடைய வேலைத்-தல சுரண்டல் குறித்த விடயதினை சான்றுபடுத்திக் கொள்ளவேண்டும்[6]
- வேலைத்-தல சுரண்டல் குறித்த விடயதிற்கும், விசா நிபந்தனை மீறலுக்கும் இடையேயுள்ள தொடர்பினை சுருக்கமாகச் சொல்லவேண்டும், மற்றும்
- வருங்காலத்தில் உங்களுடைய விசா நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவதற்கான பற்றுறுதியை மேற்கொள்ள வேண்டும்.

உங்களுடைய வேலைத்-தல சுரண்டலைப் பற்றி 'உள்நாட்டு விவகாரத் திணைக்கள'த்திற்குத் தெரிவிக்க, 'வேலைத்-தலப் பாதுகாப்புப் புகார்முறை வலுவூட்டல் வேண்டுகோள் படிவம்' (Strengthening Reporting Protection Request Process form)[7] எனும் படிவத்தினை நீங்கள் பூர்த்தி செய்யலாம்.

## எனக்குள்ள வேலைத்-தல உரிமைகள் யாவை?

உங்களுக்குக் கொடுக்கப்பட இயலுமான குறைந்தபட்ச ஊதியம் (1 ஜூலை 2024 அன்றைய நிலவரப்படி வயதுவந்த முழுநேர அல்லது பகுதி-நேரத் தொழிலாளர்களுக்கான தற்போதைய தேசிய அளவிலான குறைந்தபட்ச ஊதியம் ஒரு மணி நேரத்திற்கு $24.10 ஆகும்), எத்தனை மணி நேரத்திற்கு வேலை செய்யுமாறு நீங்கள் தேவைப்படுத்தப்படலாம் என்பது, மற்றும் எத்தனை முறை உங்களுக்கு இடையோய்வு கொடுக்கப்படவேண்டும் என்பதைப் போன்ற விடயங்களில் வேலைத்-தலத்தில் உங்களுக்குள்ள உரிமைகளைப் பற்றிய சட்டங்கள் ஆஸ்திரேலியாவில் உள்ளன. ஒரு 'அவார்ட்' (award)[8] (குறைந்தபட்ச ஊதியம் மற்றும் வேலைத்-தல நிலவரம் குறித்த ஆவணம்) அல்லது ஒரு 'பதிவு செய்யப்பட்ட வேலை ஒப்பந்தம்' (தொழில்முனைவு ஒப்பந்தம்' போன்ற ஒரு ஒப்பந்தம்) (registered employment agreement (such as an enterprise agreement)[9] , அல்லது ஒரு 'வேலை ஒப்பந்தம்' (employment contract) போன்ற வெவ்வேறு ஆவணங்களில் இந்த விதிமுறைகளைக் காணலாம்.

'வேலைத்-தல நியாய சட்டம் 2009' (Fair Work Act 2009 (Cth))[10] -இன் கீழ், மற்ற ஆஸ்திரேலியத் தொழிலாளர்களுக்குள்ள அதே அடிப்படை உரிமங்களும் பாதுகாப்புகளும் விசா வைத்திருப்பவர்களுக்கு உள்ளன.

இவற்றில் உள்ளடங்குவன:

- உதாரணத்திற்கு - சம்பளம் மற்றும் கூலித்தொகைகள், 1 ஜூலை 2024 அன்றைய நிலவரப்படி வயதுவந்த முழு நேர அல்லது பகுதி நேரத் தொழிலாளர்களுக்கான தற்போதைய தேசிய அளவிலான குறைந்தபட்ச ஊதியம்

[6] https://immi.homeaffairs.gov.au/visas/working-in-australia/work-rights-and-exploitation/strengthening-reporting-protections-pilot#content-index-3

[7] https://immi.homeaffairs.gov.au/visas/working-in-australia/work-rights-and-exploitation/strengthening-reporting-protections-pilot/request-process-form
[8] https://www.fairwork.gov.au/employment-conditions/awards
[9] https://www.fairwork.gov.au/employment-conditions/agreements
[10] https://www.legislation.gov.au/C2009A00028/latest/versions

ஒரு மணி நேரத்திற்கு $24.10 ஆகும். குறைந்தபட்ச ஊதியங்கள் வழமையாக ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்படும்.

- சில சூழ்நிலைகளில்* நியாயமற்ற முறையில் வேலை-நீக்கம் செய்யப்படுவதிலிருந்து (‘fired’ அல்லது ‘sacked’) பாதுகாப்பு.
- வேலைத்-தல உரிமை ஒன்றைப் பயன்படுத்தியதன் காரணமாகப் பாகுபடுத்தப்படுவதில் (மோசமாக நடத்தப்படுவதில்) இருந்து பாதுகாப்பு - உதாரணமாக, சுகவீனம் அல்லது காயத்தின் காரணமாக வேலை செய்ய இயலாமல் இருக்கும் பொழுது விடுப்பு எடுப்பது, அல்லது தமது வேலையைப் பற்றிய புகார் அல்லது விசாரணை ஒன்றை மேற்கொள்வது.
- வேலைத்-தலத்தில் பாலியல் ரீதியாய்த் தொல்லைப்படுத்தப்படல் அல்லது மிரட்டப்படல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு.
- பாகுபடுத்தலில் இருந்து பாதுகாப்பு - வயது, இயலாமை, பாலினம், இனம், பாலியல் நாட்டம் மற்றும் மதம் ஆகியவற்றின் அடிப்படையில் சட்டத்திற்குப் புறம்பாகப் பாகுபடுத்தப்படுவது இதில் உள்ளடங்கும்.

<u>*நியாயமற்ற, அல்லது சட்டப் புறம்பான முறையில்</u> நீங்கள் வேலை-நீக்கம் செய்யப்பட்டிருக்கிறீர்கள் என்று நீங்கள் நினைத்தால், ‘வேலை நியாய ஆணைய’(Fair Work Commission)த்திடம் கோரல் ஒன்றை ஏற்படுத்த உங்களுக்கு 21 நாட்கள் அவகாசம் இருக்கும். விதிமுறைகளும், விலக்குகளும் செல்லுபடியாகும். இதைப் பற்றிய அறிவுரையை நீங்கள் உடனடியாக நாடவேண்டும்.[11]

உங்கள் விசாவிற்கான நிபந்தனைகளுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டியது முக்கியம். உங்களுடைய விசா நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கான உங்களுடைய இயலுமையைப் பற்றிய கவலைக் கரிசனம் உங்களுக்கு இருந்தால், பதிவு பெற்ற புலப்பெயர்வு முகவர் (registered migration agent (RMA)) அல்லது சட்டப் பிரதிநிதி ஒருவருடன் நீங்கள் கலந்துபேச வேண்டும், அல்லது ‘உள்நாட்டு விவகாரத் திணைக்கள’த்துடன் தொடர்புகொள்ள வேண்டும்.[12]

இருப்பினும், உங்களுடைய புலப்பெயர்வு நிலை எதுவாக இருந்தாலும், வேலைத்-தல சட்டங்களின் கீழ் உரிமங்களும் பாதுகாப்புகளும் உங்களுக்கு உள்ளன. ‘புலப்பெயர்வு சட்ட’த்தின் கீழ், பின்வரும் சூழ்நிலைகள் இதில் உள்ளடக்கும்:

- உங்களுடைய விசா நிபந்தனை ஒன்றை நீங்கள் மீறியுள்ள நிலை,
- உங்களுடைய விசா நிபந்தனைகளின் பிரகாரம் ஆஸ்திரேலியாவில் வேலை செய்வதற்கான உரிமை உங்களுக்கு இல்லாத நிலை, அல்லது
- தற்சமயம் உங்களுக்கு விசா இல்லாத நிலை.

## வேலைத்-தல சுரண்டலுக்கான அறிகுறிகள் யாவை?

வேலை நேரத்தில் தொழிலாளி ஒருவர் தவறாக நடத்தப்படும் பல விதமான சூழ்நிலைகள் சுரண்டல்-தனமான நடத்தையில் உள்ளடங்கலாம்.[13] பின் வருவனவற்றைப் போன்ற பல வடிவங்களில் இது இடம்பெறக் கூடும்:

- உங்களுடைய விசாவை இரத்து செய்வதற்கான மிரட்டல்கள்.
- வேலை செய்யுமாறு வலுக்கட்டாயப்படுத்தப்படல்.
- அளவிற்கதிகமான நீண்டநேரத்திற்கு வேலை செய்தல்.
- குறைவாகக் கொடுக்கப்படும் கூலித்தொகைகள் மற்றும் சம்பளம் இல்லாத பயிற்சி.
- சம்பளத்-துண்டுகளைக் கொடுக்கத் தவறுதல்.
- சம்பளத்திலிருந்து நியாமற்ற வகையில் பிடித்துக்கொள்ளப்படும் தொகைகள் (உதாரணத்திற்கு, தங்குமிடம், பயிற்சி, உணவு அல்லது போக்குவரத்து செலவு. ஆகியவற்றிற்காக), வைப்புத்தொகைகள் அல்லது ‘பணத்-திருப்பல் திட்டங்கள்’ (‘cash-back’ schemes).[14]
- வேலைத்-தல உரிமங்களைப் பெறாமல்

[11] https://www.fairwork.gov.au/ending-employment/unfair-dismissal

[12] https://immi.homeaffairs.gov.au/visas/already-have-a-visa/check-visa-details-and-conditions/see-your-visa-conditions

[13] ‘சுரண்டல்’ (‘Exploitation’) என்பதன் அர்த்தம் ‘குற்றவியல் சட்டக் கோவை’(Criminal Code)-யின் உபபிரிவு 271.1A-இல் விளக்கிச் சொல்லப்பட்டுள்ளது - https://www.legislation.gov.au/C2004A04868/latest/text/2

[14] பிடித்துக்கொள்ளப்படும் தொகைகள் அனைத்தும் நியாமற்றவையாக இருக்காது.

இருத்தல், உதாரணமாக, நோய்க்கால விடுப்பு மற்றும் வருடாந்திர விடுப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய சம்பளத்தோடு கூடிய விடுப்பு அல்லது ஓய்வுகால நிதி (superannuation).

- உங்களுடைய கடவுச்சீட்டைப் பறித்து வேறொருவர் வைத்திருத்தல்.
- குறிப்பிடப்பட்டுள்ள விசா நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டு வேலை செய்யவேண்டும் என்ற அழுத்தம்.
- வேலை ஒன்றிற்காக முன்-பணம் தருமாறு, அல்லது தொகை ஒன்றை இருப்பில் வைத்துக்கொள்ளத் தருமாறு கொடுக்கப்படும் அழுத்தம்.
- உங்களுக்குப் பணமாகக் கொடுப்பதன் மூலம் முதலாளிகள் வரி செலுத்துவதைத் தவிர்த்தல்.
- ஒரு தொழிலாளியாக இல்லாமல் சுயாதீன ஒப்பந்ததாரர் ஒருவராக வகைப்படுத்தப்படல்.
- பாதுகாப்பு இல்லாத சூழல்களில் வேலை செய்தல்.
- நீங்கள் வசிப்பதற்கு தரம் குறைந்த தங்குமிடம் ஒன்றை உங்களுடைய முதலாளி கொடுப்பது மட்டுமின்றி அந்த இடத்திற்கு வாடகை செலுத்துமாறு உங்களைக் கட்டாயப்படுத்துதல்.
- வேலைத்-தலத்திலிருந்து செல்வதற்கு அனுமதிக்கப்படாமை.
- தொழிலாளர் சங்கம் ஒன்றில் சேரக்கூடாது என்ற அழுத்தம்.

வேலைத்-தல உரிமைகள் மற்றும் பொறுப்புகளை முதலாளிகள் தவறுதலாக, அல்லது வேண்டுமென்றே தெரிந்துகொள்ளாமல், விளங்கிக்கொள்ளாமல் அல்லது அவற்றிற்குக் கட்டுப்படாமல் இருக்கும் பொழுது வேலைத்-தல சுரண்டல்கள் நிகழ்கின்றன.

## எனது வேலைத்-தல உரிமைகள் மீது என்னுடைய விசா நிபந்தனைகள் எவ்வாறு தாக்கம் ஏற்படுத்தும்?

நீங்கள் செய்ய இயலுமான, அல்லது செய்ய இயலாத வேலைகள் சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் உங்களுடைய விசாவில் உள்ளடங்கியிருக்கக்கூடும். இந்த விசா நிபந்தனைகளின் காரணமாக, சில வேலைகளைச் செய்யுமாறு அல்லது செய்யக்கூடாது என்று முதலாளி ஒருவர் நியாயமான முறையில் உங்களுக்கு அறிவுறுத்தலாம். உதாரணமாக, குறிப்பிட்ட வேலை ஒன்றை மட்டுமே செய்ய உங்களுடைய விசா உங்களை அனுமதிக்கிறது என்றால், அந்த வேலையை மட்டுமே செய்யுமாறு உங்களுடைய முதலாளி உங்களுக்கு அறிவுறுத்தக்கூடும்.

உங்களுடைய விசாவிற்கான நிபந்தனைகளைப் பற்றிய தகவல்கள் உங்களுடைய விசா வழங்கல் கடிதத்தில் உள்ளடங்கியிருக்கலாம். மாறாக, ‘உள்நாட்டு விவகாரத் திணைக்கள’த்தின் வலைத்தலத்தில் ‘விசா உரிம இணைய-வழி சரிபார்ப்பு’ (Visa Entitlement Verification Online: Visa holder enquiry (immi.gov.au) (VEVO))[15] எனும் சாதனம் மூலமாக உங்களுடைய விசா நிபந்தனைகள் உள்ளடங்க, உங்களுடைய விசாவைப் பற்றிய விபரங்களை நீங்கள் சோதித்துப்பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

பதிவுபெற்ற புலப்பெயர்வு முகவர் அல்லது சட்டதரணி ஒருவரை நீங்கள் அமர்த்தியிருந்தால், உங்களுடைய விசா நிபந்தனைகளைப் பற்றிய வழிகாட்டல்களை அவர்களாலும் உங்களுக்குக் கொடுக்க இயலும்.

## மேலதிகத் தகவல்கள்

Visa holders and migrants - Fair Work Ombudsman[16]

The National Employment Standards (NES)[17] என்பவை பெரும்பாலான தொழிலாளர்களுக்குப் பொருந்தும் குறைந்தபட்ச வேலை சம்பந்தப்பட்ட உரிமைகள் ஆகும்.

‘வேலை-நியாயம் குறித்த தேசிய தர-நிலைகள்’ (NES) மற்றும் இதர குறைந்தபட்ச உரிமங்களைப் பற்றிய தகவல்கள் ஆகியன ‘வேலை நியாயத் தகவல் கூற்று’ (FWIS)[18] எனும் ஆவணத்தில் உள்ளடங்கியிருக்கும். FWIS எனும் இந்த ஆவணத்தினை அனைத்து முதலாளிகளும் அவர்களுடைய புதிய தொழிலாளர்களுக்குக் கட்டாயம் கொடுத்தாக வேண்டும்.

[15] https://online.immi.gov.au/evo/firstParty?actionType=query
[16] https://www.fairwork.gov.au/find-help-for/visa-holders-migrants
[17] https://www.fairwork.gov.au/employment-conditions/national-employment-standards
[18] https://www.fairwork.gov.au/employment-conditions/information-statements/fair-work-information-statement

Fair Work Ombudsman

Fair Work Commission

Record My Hours

Australian Taxation Office

Strengthening Reporting Protections Pilot

Workplace Justice Visa Pilot

Australian Federal Police

**இந்த ஆவணமானது ‘உள்நாட்டு விவகாரத் திணைக்களத்தின் ஆக்கமாகும், மற்றும் ‘பதிவுபெற்ற புலப்பெயர்வு முகவர்க’(RMA)ளால் விநியோகிக்கப்படுவதற்காக இது உருவாக்கப்பட்டுள்ளது. ‘பதிவுபெற்ற புலப்பெயர்வு முகவர்’ (RMA) ஒருவரால் அளிக்கப்படும் சட்ட அறிவுரை அல்லது புலப்பெயர்வு ஒத்தாசை ஆகியன இந்த ஆவணத்தில் இல்லை.**